REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 1உ செவ்வாய் (14—5—57) ★ வெளியூர்: வைகாசி 2உ புதன் (15—5—57) இதழ் [287

டில்லியின் புதிய வரிவிதிப்புகள்!

★

தேவையானவை என்று கருதப்படும் மாறுதல்களுடன், வரவு—செலவுத் திட்டம் மக்கள் சபையில் மீண்டும் தாக்கல் செய்யப்படும் என்று குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் மக்கள் சபை, ராஜ்யங்கள் சபை உறுப்பினர்கள் அடங்கிய கூட்டுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருப்பது, புதன் கிழமையன்று நிதியமைச்சர் புதிய வரிவிதிப்புகளை அறிவிக்கவிருக்கிறார் என்பதை உறுதி செய்வதாகவே அமைந்திருக்கிறது என்று பார்வையாளரால் கருதப்படுகிறதாம்!

சேலம் உருக்குத் தொழிற்சாலை-காங்கிரசு மாவட்டக் கழகம் வற்புறுத்தல்

காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் வரிப் பணம் பாழ்!

அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை தவருகப் பயன்படுத்தப்பட்டது?

விசாரணை செய்ய சர்வகட்சி குழு நியமிக்கிறது ஒரிசா சார்க்கார்

புவனேஸ்வரம், மே 12—

நிவாரண வேலைகளுக்காகவும், அபிவிருத்தித் திட்டங்களுக்காகவும் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த பொதுப் பணத்தைத் தவருன வழிகளில் உபயோகித்ததாகப் புகார் கிளம்பியுள்ளதால், அது குறித்து விசாரிக்க ஒரிசா சர்க்கார் விசாரணைக் குழு ஒன்று நிறுவியுள்ளனராம்.

பொதுப் பண உபயோக சர்வ கட்சி விசாரணைக் குழு ஒன்று இந்தப் புகார் பற்றி விசாரித்து பொதுப் பணம் தவருக உபயோகிக்கப்பட்டதற்கோ பாழடிக்கப்பட்டதற்கோ யார் பொறுப்பாளி என்பதை நிர்ணயித்து, இனி எதிர்காலத்தில் அப்பணம்—மக்கள் வரிப்பணம் பாழாகாமல் தடுப்பதற்கான வழிமுறைகளையும் கூறுவர் என்று சர்க்கார் குறிப்பொன்று கூறுகிறது.

'இரும்புக் கனிப் பொருளை எடுக்கத் தனி நபர்களை அனுமதிக்கக்கூடாது'

'அரசாங்கமே அப்பணியை மேற்கொள்ள வேண்டும்'

தி. மு. கழக உறுப்பினர் தீர்மானம் நிறைவேற்றம்

சேலம், மே 11—

"சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனியை தனிப்பட்டோர் வெட்டியெடுக்க அனுமதிக்கக்கூடாது; அதை வெட்டியெடுப்பதற்கு அரசியலாரே முன்வர வற்புறுத்த வேண்டும்" என்ற தீர்மானமொன்று, சேலம் மாவட்ட ஆட்சி மன்றத்தில் நமது கழகத் தோழரும் மாவட்ட ஆட்சி மன்ற உறுப்பினருமான தோழர் இரா. தாண்டவன் அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மேலும், சேலத்தில் இரும்பு—உருக்குத் தொழிற்சாலையொன்றை அரசியலார் ஏற்படுத்த வேண்டுமெனறு வற்புறுத்தி வேறு ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சேலம் மாவட்ட ஆட்சிமன்றக் கூட்டம், தலைவர் டி. எம். காளியண்ணன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சிமன்ற நிருவாகத்தில் உள்ள மருத்துவ விடுதிகளில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு துவக்க ஊதியம் மிகவும் குறைவாய் உள்ளதால், மாவட்ட ஆட்சி மன்றம் மருத்துவர்கள் தேவையைப் பலமுறை விளம்பரம் செய்தும் யாரும் பணியாற்ற முன்வரவில்லை என்றும், எனவே அவர்களின் துவக்க ஊதியத்தை ரூ. 150-க்கு உயர்த்த வேண்டும் என்று அரசியலாரைக் கேட்டுக்கொள்வது என்ற ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டதோடு மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

'செஸ் நிதி'—கைத்தறியாளருக்கு தூக்குக் கயிறு போன்றது!

ஆச்சாரியார் தந்த எச்சரிக்கையைச் சுட்டிக் காட்டுகிருர் அண்ணு

நெசவாளரின் கூலி, வேலை நேரம் இவற்றிற்குப் பாதுகாப்புவேண்டும்

சென்னையில் நடைபெற்ற அகில இந்திய கைத்தறி வார விழாவின் கடைசி நாளான கடந்த 11-5-57-ல் அண்ணு அவர்கள் ஆற்றிய கருத்துரையின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; அவரது பேச்சின் மற்ரெரு பகுதி இங்கு தரப்படுகிறது :—

தூக்குக் கயிறு!

"ஆலைத் துணிக்கு வரிவிதித்து அதனை 'செஸ் நிதி' என்ற பெயரில் கைத்தறியாளருக்குத் தருகிறது சர்க்கார். இந்த 'செஸ் நிதி'யை ஒருமுறை ஆச்சாரியார் கைத்தறியாளருக்குத் தூக்குக் கயிறு என்று கூறியதாக எனக்கு நினைவு இருக்கிறது.

"அத்தகைய 'செஸ்நிதி' வழங்கலும், இதுபோன்ற விழாக்களுமே கைத்தறியாளரைக் காப்பாற்றிவிடுமா என்ருல், நிச்சயம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

எதற்குப் பயன்படும்?

"இதுபோன்ற விழாக்கள் மக்களை, ஓரிடத்தில் கொண்டுவந்து சேர்க்கவும், அவர்களுக்குக் கைத்தறியின் நேர்த்தியையும், பல வண்ணங்களையும், நெசவாளரின் கைத்திறனையும் எடுத்துக்காட்டி அவர்களை ஊக்குவிப்பதற்கும் வேண்டுமாளுல் பயன்படலாம்.

விழா நாளைக் குறிக்கக் கூட அதிகாரம் இல்லையே!

"அதுகூட, இந்த விழா தை மாதத்தில் பொங்கல் நன்ஞளை ஒட்டி ஏற்பாடு செய்யப்படுமாளுல் இன்னும் அதிகமான பலன் கிடைக்கும் என்று நான் இரண்டாண்டுகளுக்கு முன் கூறினேன். அந்த நாட்களில், எல்லா மக்களும்—கிராமப்புறங்களில் வாழ்வோரும், ஏழை எளியோரும் துணிகள் வாங்குவர். அந்த தை மாதத்தில் இந்த விழா நடைபெறுவது இன்னும் பொருத்தமாயிருக்கும். ஆளுல் இந்த விழா நாளைக் குறிக்கும் அதிகாரம்கூட நமக்கு இல்லை; யாரோ, எங்கோ குறிக்கிருர்கள்!

எதிர்காலத்தை இழந்து விடவேண்டுமா?

"இதனுல்தான் கைத்தறிக்கு எதிர்காலம் உண்டா இல்லையா என்பதை சர்க்கார் திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்கிறேன்.

"கட்டை வண்டிக்காரர்களுக்கு எதிர்காலம் இல்லை! அதுபோல சிலபல தொழில்கள், இயந்திரத் தொழில்களின் வளர்ச்சியால் எதிர்காலத்தை இழந்துவிட்டன!

"அதுபோலவே, கைத்தறியும் எதிர்காலத்தை இழந்துவிட வேண்டுமா என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். என்னைக் கேட்டால், இந்தக் கைத்தறி, எத்தனைதான் இயந்திரத் தொழில் வளர்ந்தாலும் இருக்க வேண்டும்—நீடிக்க வேண்டும்—நீடிக்க முடியும் என்று கூறுகிறேன்.

தெரியவில்லையே!

"ஆளுல் சர்க்கார், இந்தத் தொழில் நிற்க வேண்டும்-நிலைக்க வேண்டும் என்று விரும்புகிறதா என்பது தெரியவில்லை.

"நிற்க வேண்டும்—நிலைக்க வேண்டும் என்று விரும்பிளுல், நாம் கட்சிக் கண்ணேட்டத்தை விட்டு அரசியல் கண்ணேட்டத்துடன் பிரச்சினையைஅணுகலாம்.

எப்படி முடியும்?

"தலைவர் அவர்கள், 'அரசியல் கருத்துக்களைப் பேச வேண்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் 'ஜனதாபாலிசி' திட்டம்

தென்னுட்டு நகரங்களிலும் அமுலாகுமாம்

பம்பாய், மே 13—

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை கிராமப்புறங்களிலும் பரப்புவதற்காக திட்டம் ஒன்று, ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்தால் வகுக்கப்பட்டுள்ளதாம்.

இந்தத் திட்டப்படி, 'ஜனதா பாலிசி' என்ற பெயரில், ரூ. 250 முதல் ரூ. 1,000 வரை உள்ள பாலிசிகள் கொடுக்கப்படும் என்றும், இவை, குறைந்த வருமானமுடையவர்களுக்கு இன்ஷ்யூர் செய்துகொள்ள வசதி தேடித் தருவதாகும் என்றும், மாதம் ஒரு ரூபாய் வீதம் கட்டினுல் இருபது ஆண்டுகளில், ரூ. 250-க்கான பாலிசி கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

இந்தத் திட்டம் துவக்கத்தில், பம்பாய், அகமதாபாத், ஷோலாப்பூர் போன்ற வடநாட்டு தொழில் நகரங்களில் முதலில் அமுல் செய்யப்படும் என்ருலும், சென்னை, கோவை, தஞ்சை, ஐதராபாத் முதலிய தென்னுட்டு நகரங்களிலும் அமுல் செய்யப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கப்பல்கள்

சூயஸ் கால்வாய் வழியாகச் செல்லுமென அறிவிப்பு

லண்டன், மே 13—

'பிரிட்டிஷ் கப்பல்கள் இனி சூயஸ்கால்வாய் வழியாகச் செல்லும்,' என்று பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லன் காமன்ஸ் சபையில் அறிவித்துள்ளார்.

கால்வாய்க் கட்டணம் ஸ்டர்லிங் கணக்கில் செலுத்தப்படுதல் வேண்டுமாம்.

குடியரசுத் தலைவராக மீண்டும் இராசேந்திரப் பிரசாத்

புதுடில்லி, மே 13—

இந்தியாவின் குடியரசுத் தலைவராக டாக்டர் இராசேந்திரப் பிரசாத் இரண்டாம் முறையாக இன்று பதவி ஏற்றுக்கொண்டார்.

இன்று காலை மக்கள் சபையின் மைய மண்டபத்தில், இந்தப் பதவி ஏற்புவைபவம் நடைபெற்றிருக்கிறது.

தலைமை உயர் நீதிமன்ற பிரதம நீதிபதி பதவிப் பிரமாணம் செய்வித்திருக்கிருர்.

குடியரசுத் தலைவர் பதவி ஏற்றதும், துணைக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணனுக்குப் பதவிப் பிரமாணம் செய்வித்திருக்கிருர்.

ஊர்வலம், இராணுவ அணிவகுப்பு, பீரங்கி முழக்கம் முதலிய வழக்கமான சம்பிரதாய நிகழ்ச்சிகளும் இந்தச் சடங்கின்போது நடைபெற்றுள்ளன.

முகாம்களிலிருந்து ஓடிவரும் அகதிகளின் அகம்பாவம்

மக்கள் சபையில் கண்டனம்

புதுடில்லி, மே 13—

"மேற்கு வங்கத்திலிருந்து வந்த அகதிகள் பீகாரில் உள்ள பெட்டையா அகதி முகாமிலிருந்து கிழக்கு வங்கம் ஓடி வந்துள்ளனர்; அவர்கள், தங்களுக்கு சர்க்காரிடமிருந்து ஏதேனும் உதவி தேவை என விரும்பினுல், மீண்டும் பீகாருக்கே திரும்பிவிடவேண்டும்" என்று, பண்டித நேருவும், அகதி மந்திரி கன்னுவும் மக்கள் சபையில் கண்டிப்பாகத் தெரிவித்திருக்கின்றனராம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 14—5—57 செவ்வாய்

என்ன செய்யப்போகின்றார்கள்?

★

மாணவர்களிடம் முதன்முதலாகத் தொடர்புகொண்ட அரசியல் கட்சி காங்கிரசுக் கட்சியேயாகும். தங்களுக்குள்ள கடமையான கல்வி கற்றுத் தேர்ச்சி பெறுவது என்பதையும் புறக்கணித்து, நேரடியாக அரசியலில் பங்கு கொள்ள வேண்டுமென முதல் முதலாக மாணவர்களை அழைத்த கட்சியும் காங்கிரசுக் கட்சியேயாகும்.

கல்வி பெறும் தங்களுடைய இயல்பையும் கடமையையும் கைவிட்டுவிட்டு, தாங்கள் நடத்திய அரசியல்போராட்டங்களில் மாணவர்களை வலுக்கட்டாயமாக இழுத்துவந்து பலி கொடுத்தக் கட்சி காங்கிரசுக் கட்சிதான் என்பதை எவரும் மறுக்க முடியாது. காங்கிரசுத் தலைவர்களின் சொல் கேட்டுத் தங்களுடைய பள்ளிக் காலம் முற்றுப்பெறுவதற்குள்ளாகவே படிப்பைக் கெடுத்துக்கொண்டு, தங்கள் எதிர்காலத்தையும் தம்தம் பெற்றோர்களின் நம்பிக்கையையும் சீரழித்துக்கொண்ட மாணவர்களை, நாட்டுப்பற்றுடைய விடுதலை வீரர்கள் எனப் பலபட பாராட்டிய காங்கிரசுக் கட்சியின் அக்கால நடத்தையை இதற்குள் எவராவது மறந்திருக்கவும் முடியாது.

மாணவர் உலகத்தில் காங்கிரசுக் கட்சி மட்டுமே தனிப்பெரும் ஆதிக்கம் செலுத்தி வருவதைக் கண்டு, மற்ற அரசியல் கட்சிகளும் காங்கிரசுக் கட்சியை வழிகாட்டியாகக்கொண்டு மாணவர்களிடம் தொடர்பு கொள்ள முன்வந்தன. இதன் விளைவாகக் காலப்போக்கில், மாணவர்களிடம் மற்ற அரசியல் கட்சிகளுக்கும் ஓரளவுத் தொடர்பு ஏற்படலாயிற்று. திரும்பவும் இதன் விளைவாக, மாணவர்களிடம் ஏற்கனவே காங்கிரசுக் கட்சிக்கு மட்டுமே இருந்துவந்த ஆதிக்கம் அளவிலும், வலிவிலும், பொலிவிலும் மெள்ள மெள்ளக் கரையத் தொடங்கிவிட்டது. அதன் எதிரொலிதான், அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுவின் பதைபதைப்பும், மீண்டும் மாணவர்களிடை 'நெருக்கமான தொடர்பை' ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற தீவிரமான முனைப்பும்!

மற்ற மாநிலங்களில் நடைபெறும் மாணவர் கிளர்ச்சிகளைப்போல் நமது சென்னை மாநிலத்தில் மாணவர் கிளர்ச்சிகள் இதுவரை நடைபெற்றது கிடையாது. அங்கு பேராசிரியரை மாற்றினாலும், பரீட்சை வினாத் தாள்கள் கடினமானதாக இருந்தாலும், தங்களுக்கு விருப்பமில்லாப் பாடத் திட்டங்களை மாற்றியமைக்க விரும்பினாலும், மாணவர்கள் கிளர்ச்சியில் ஈடுபடக் கிளம்பிவிடுகின்றனர். அத்தகு விசித்திரமான கிளர்ச்சிகளும் அமைதியாக நடைபெறுவது கிடையாது. பாதுகாப்புப் படையினருக்கும் மாணவர்களுக்கும் கைகலப்பு ஏற்பட்டு, பாதுகாப்புப் படையினர் துப்பாக்கியால் மாணவர்களைச் சுட்டுக் கொல்லுகின்ற அளவிற்கும், அங்கு நடைபெறும் மாணவர் கிளர்ச்சிகள் சென்றுவிடுகின்றன.

இத்தகு விரும்பத்தகாத செயல்களை, சென்னை மாநில மாணவர் உலகம் நெஞ்சினாலும் இதுவரை தீண்டியது கிடையாது என உரைப்பது மிகைபட உரைத்ததாகாது. தீவினை கண்டு அஞ்சும் நமது மாணவர்களின் பேருள்ளத்தை இங்குள்ளார் பாராட்டக் கடமைபட்டுள்ளனர்.

வடநாட்டு மாணவர்களுக்கும், சென்னை மாநில மாணவர்களுக்கும், இந்த செயல்முறை பேதம் இருக்கக் காரணம் என்ன என்பது சிந்திக்கத்தக்கது. அப்பொழுதுதான், நமது முன்னேற்றக் கழகம் இங்குள்ள மாணவர்களிடை தொடர்பு கொண்டிருப்பதின் பலாபலனை நிர்ணயிப்பது சாத்தியமாகும்.

மாணவர்கள், அவர்கள் கல்லூரிகளில் கற்பவர்களாக இருந்தாலும், உயர்நிலைப்பள்ளியில் கற்பவர்களாக இருந்தாலும், அவர்கள் அனைவரும் முன்னேற்றக் கழகத்தின் அரசியல் — பொருளாதார — சமுதாயக் கருத்துக்களை சிக்கறத் தெரிந்து கொள்ளுகின்ற அளவிற்குத்தான், நமது கழகத்தில் தொடர்பு கொண்டிருப்பவர்களாவர். அந்தத் தொடர்பும் நேரடித் தொடர்பாக இருக்கவில்லை.

மாணவர்கள் பொது அறிவைப் பெற வேண்டியது முக்கியமாகும். அதுபோன்றே நாட்டின் அரசியல் நடப்பையும் அவர்கள் தெரிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும். அவ்விரண்டுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, மாணவர்களிடை தொண்டாற்றிவிடுவதுதான் நமது மாணவர் கழகத்தின் அடிப்படை இலட்சியமாகும். அதே உயர்ந்தகுறிக்கோளுடன்தான் நமது மாணவர் கழகம் இதுவரை மாணவர்களிடை பொறுப்புடன் தொண்டாற்றி வந்திருக்கின்றது.

நமது கழகத்திற்கும் மாணவர் உலகுக்கும் உள்ள தொடர்பை, நமது பகுதி காங்கிரசு ஆளவந்தார்கள் நன்கு உணர்ந்தே இருக்கின்றனர். அவர்களைப் போன்றே, இங்குள்ள முக்கிய அரசாங்க அதிகாரிகளும் தெளிவாகத் தெரிந்தே இருக்கின்றனர்.

உண்மையை விளக்கமாகத் தெரிந்தவர்களாக இருந்தாலும் காங்கிரசு ஆளவந்தார்களும், குறிப்பிடத் தகுந்த சில அரசாங்க அதிகாரிகளும், வாய்ப்பு நேர்ந்தாலும் நேராமற்போனாலும், நமது கழகம் மாணவர்களைக் கெடுத்துவருவதாக, இட்டுக்கட்டி இழித்துப் பழித்துப் பேசுவதையே, தங்கள் பொறுப்பின் ஒரு பகுதியாகக் கொண்டு செயல்பட்டுவருகின்றனர். அந்த அதிகாரிகள், தாங்கள் கலந்துகொள்ளுகின்ற பள்ளிக் கூட்டங்கள் அனைத்திலும், நமது கழக வளர்ச்சியில், தங்களுக்குள்ள வயிற்றெரிச்சலை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆளும் காங்கிரசுக் கட்சியினர், மாணவச் சிறுவர்களையும், ஆரம்ப—உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களையும், தேர்தல் காலத்தில் தாங்கள் விரும்பிய வண்ணம் பயன்படுத்திக் கொண்டு வருவதை அரசாங்க அதிகாரிகள் அறியாதவர்கள் அல்ல. அதைக் கண்டித்து நிறுத்த வேண்டும் என்ற நல்லறிவும் துணிவும் இந்த அதிகாரிகளுக்கு இருப்பது கிடையாது. ஆனால் மாணவர்களை, கற்பது நீங்களாக மற்ற எதற்கும் பயன்படுத்தக்கூடாது என்ற உயர்ந்த நோக்குடன் அரசியல் வாழ்வில் ஈடுபட்டுவரும் நமது கழகத்தைக் குறித்துமட்டும், இந்த அதிகாரிகள் வாயில் வந்தபடி ஏசியும் பேசியும் வருவது, ஆங்கில ஏகாதிபத்தியக் காலத்து அரசாங்க ஊழியர்களிடமும் நாம் காணாததும் கேள்விப்படாததுமான விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

இனி காங்கிரசுக் கட்சி, ஏற்கனவே மாணவர்களிடம் தனக்கிருந்துவந்தத்தொடர்பை மேலும் 'நெருக்க'மானதாக ஆக்க முயற்சிக்கப் போகிறதாம் அதுவுமன்றி ஆசிரியர்களிடம் அக்கட்சி ஆதிக்கம் செலுத்த முடிவு கட்டி இருக்கின்றதாம். காங்கிரசு கட்சியின் இந்த வெறுக்கத்தகுந்த முடிவு கண்டு நமது கழகத்தை அவசியமின்றி காய்ந்து வருவதையே பிறவிப் பயனாகக் கொண்டிருக்கின்ற குறிப்பிட்ட அரசாங்க அதிகாரிகள் என்ன செய்யப்போகின்றார்கள்? வழக்கம்போல் வாய்மூடிக் கிடப்பார்களா? அல்லது இதற்கும் நமது கழகம்தான் பொறுப்பு என்று தமது வழக்கமான முறையை மேலும் தீவிரமாக்கப் போகின்றார்களா?

பண்டா கொண்டுள்ள சிங்களவெறி

'போதுமானதல்ல' என்கிறார் கோத்தலாவலை

கொழும்பு, மே 9—

அரசாங்க மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண பண்டாரநாயகா சர்க்கார் உடனடியாக ஒரு சர்வகட்சி மாநாடு கூட்ட வேண்டும் என்று கோத்தலாவலை தலைமையில் கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தீர்மானம் ஒன்று நிறைவேற்றியுள்ளதாம்.

நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கும் உறுதிக்கும் மிக முக்கியமானது நாட்டின் ஒற்றுமை என்பதால்தான், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்க்கார், உடனடியாக இந்த சர்வகட்சி மாநாடு கூட்டவேண்டுமெனக் கோரப்படுகிறதாம்.

பண்டாரநாயகா காட்டிவரும் சிங்களவெறி போதாது என்று கூறும்வண்ணம், 'சர்க்கார் சிங்களம் மட்டுமே என்ற சட்டத்தை நிறைவேற்றியிருந்தாலும், அதனை அமுல் செய்யும் விருப்பமுடையவர்களாகக் காணோம்; மேலும், அண்மையில் பண்டாரநாயகா, தமிழ்மொழி உபயோகத்திற்கென வெளியிட்டுள்ள 4 அம்சத் திட்டம் சட்டத்திற்கு விரோதமானதாகவும் இருக்கிறது' என்று தீர்மானத்தின் மற்றுமொரு பகுதி கூறுகிறது.

இந்தத் தீர்மானம் பற்றிக் கேட்டபோது, பிரதமர் பண்டாரநாயகா, 'நாங்கள் இப்படி ஒரு சர்வ கட்சி மாநாடு கூட்டுங்கள் என்று சென்ற பார்லிமெண்டில் கேட்டபோது சர்க்கார் மறுத்துவிட்டது' என்றும், 'நாங்கள் இப்போது கடைபிடித்து வரும் மொழிக் கொள்கை சரியானதே' என்றும், 'தமிழ் மொழியை நியாயமான அளவு உபயோகிப்பது என்பது சிங்கள மொழி மட்டுமே ஆட்சி மொழி என்ற நிலைக்கு முரண்பாடு ஏற்படாத வண்ணம் வரையறுக்கப்படும்' என்றும் கூறியிருக்கிறார்.

சென்னை, மே 13—

மார்ச் மாதத்தில் சென்னை மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் மொத்தம் 123 புதிய பஞ்சாயத்துகள் அமைக்கப்பட்டுள்ளது.

பூததங்கெட்டு நீர்ப்பாசனத் திட்டம்

சுமார் ரூ. 40 கோடி செலவிடப்படுமாம்

புதுடில்லி, மே 13—

திருவனந்தபுரத்திலுள்ள பெரியார் ஆற்றுக்குக் குறுக்கே அணை கட்டி நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தித்தரும் பூததங்கெட்டு நீர்ப்பாசனத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாம். இதுவே கேரளத்தின் பெரிய நீர்ப்பாசனத் திட்டமாகும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இதற்கு ரூ. 3·48 கோடி செலவிடப்படுமாம்.

மத்திய ஆட்சியிடம் கேரளத்தின் கோரிக்கை

திருவனந்தபுரம், மே 13—

பொதுத் தேர்தலுக்குமுன் பலத்த கிளர்ச்சி நடைபெற்ற பிறகு தற்காலிக நீதிமன்றம் திருவனந்தபுரத்தில் ஏற்படுத்தப்பட்டது.

இதற்கு தாக்கல் அதிகாரம் கிடையாது; எனவே, ஒரு நிரந்தர நீதிமன்றம் வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் கேரளம் வற்புறுத்தியிருப்பதாகத் தெரிய வருகிறது.

பெரிய—சிறிய தொழில்களிடை

ஒத்துழைப்பு

இந்திய சர்க்கார் முயற்சி

புதுடில்லி, மே 13—

தொழில் அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள பெரிய தொழிற்சாலைகள், சிறிய கைத்தொழிற்சாலைகளுடன் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள இந்திய அரசாங்கம் முயன்றுள்ளது. இதனால் பெரிய தொழிற்சாலைக்கு சிறிய தொழிற்சாலைகள் உதவியாக இருக்கும்.

இது சம்பந்தமாக 3,000 தொழிற்சாலைகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாம்.

இந்தியாவில் பிறப்பு—இறப்பு விகிதங்கள்

புதுடில்லி, மே 13—

இந்தியாவில் 1957 மார்ச் திங்களில் 30,000-மும் அதற்கு அதிகமாகவும் மக்கள் உள்ள நகரங்களில் பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 27·00 ஆகவும், இறப்பு 12·7 ஆகவும் உள்ளது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டில் பிறப்பு விகிதம் 27·9 ஆகவும் இறப்பு விகிதம் 11·8 ஆகவும் இருந்துள்ளது.

ரூ.53,72,00,000 நஷ்ட ஈடாம்!

இடம் பெயர்ந்தோருக்கு இந்தியா வழங்கியுள்ளதாம்

புதுடில்லி, மே 13—

இந்தியாவிலிருந்து மேற்கு பாகிஸ்தானுக்கு இடம் பெயர்ந்தோருக்கு 1957-ம் ஆண்டு மார்ச் முடிய ரூ. 53,72,00,000 நஷ்ட ஈடு தொகையாக இந்திய அரசாங்கம் தந்துள்ளதாம்.

சென்னையில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம்

தீவிரமாக அமுல் செய்ய அரசாங்கத்தின் முயற்சி

சென்னை, மே 13—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை தீவிரமாக அமுல் செய்ய சென்னை அரசாங்கம் முனைந்துள்ளது. குடும்பக் கட்டுப்பாடு திட்டக் கழகத்தை சென்னையில் நிறுவவும் ஆராயப்படுகிறதாம்.

இப்போது இந்தத் திட்டத்தை சென்னை நகரசபையும், அரசாங்கமும் தனித்தனியே நடத்திவருகிறது; இனி இரண்டும் இணைந்து பணியாற்றும்.

இயற்கைமுறை, இரணசிகிச்சைமுறை, கருவி உபயோகமுறை ஆகியவைகளைப் பற்றி பிரச்சாரம் செய்யப்படுமாம்.

சென்னை நகரில் ஆண்டுதோறும் 66,000 குழந்தைகள் பிறக்கின்றனவாம். இதில் 40 சதவிகிதம் மருத்துவவிடுதிகளிலும், 25 சதவிகிதம் நகரசபை விடுதிகளிலும், 25 சதவிகிதம் சொந்த வீடுகளில் நகரசபையைச் சேர்ந்த மருத்துவமனை ஊழியர்கள் உதவியுடனும், 10 சதவிகிதம் சொந்த ஏற்பாடுகளின் மூலமும் பிறந்துள்ளனவாம்.

தாய்மார்களையும், தந்தையரையும் நேரில் அணுகி, குடும்பக் கட்டுப்பாடு முறைபற்றி போதிக்கப்படுமாம்.

100 மருத்துவச்சிகளுக்கும் உடனடியாகப் பயிற்சியளிக்கப்படுமாம்.

ஜப்பானிய விவசாய முறையைப்

பரப்புவதற்குத் திட்டம்

2,000 விவசாயிகள் பயன்படுத்தப்படுவார்களாம்

சென்னை, மே 13—

வரும் ஜூலை திங்கள் முதல சென்னை மாநிலம் முழுமையிலும் ஜப்பானிய விவசாய முறையைப் பரப்ப தீவிரப் பிரச்சாரம் நடத்துவது என்று சென்னை அரசாங்க விவசாய இலாகா தீர்மானித்துள்ளதாம். இதில் அரசாங்கத்திற்கு உதவியாக 2,000 விவசாயிகள் பயன்படுத்தப்படுவார்களாம்.

வாக்காளர் பட்டியலில் திருத்தங்கள்

அரசியல் கட்சிகள் தாக்கல் செய்யலாமாம்

சென்னை, மே 13—

வாக்காளர் பட்டியலில் புதிதாகச் சில பெயர்களைச் சேர்க்கவோ அல்லது நீக்கவோ வேண்டுமென்று அரசியல் கட்சிகளின் மாவட்ட அல்லது மற்றப் பகுதி குழுக்கள் திருத்தப்பட்டியல் கொண்டுவந்து தருமானால் தேர்தல் அதிகாரிகள் அவற்றை வாங்கிக்கொள்ள மறுக்கக்கூடாதென்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறதாம்.

அவ்வாறு அரசியல் கட்சிகள் திருத்தங்களைத் தருகையில் முழு விவரங்களையும் தரவேண்டுமென்றும், அப்போதுதான் விசாரணை செய்வது சாத்தியமாகுமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

1,80,00,000 மணங்கு மிளகாய் உற்பத்தி

1,87,000 மணங்கு ஏற்றுமதி

புதுடில்லி, மே 12—

இந்தியாவில் சுமார் 12 இலட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள பகுதியில் மிளகாய் பயிரிடப்படுகிறதாம்.

ஆண்டுக்கு 1,80,00,000 மணங்கு உற்பத்தியாகிறதாம். சுமார் 1,87,000 மணங்கு மிளகாய் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதாம்.

மிளகாய் ஏற்றுமதியில் இலங்கை முதலிடம் வகிக்கிறதாம்.

கழக வளர்ச்சிக்கு உயிர் ஈந்த தோழர்களின் ஆற்றல்

‘என்றென்றும் மறப்பதற்கு இயலாதது’

அப்துல் மஜீத் படிப்பகத் துவக்க விழாவில் தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, கண்ணதாசன் எஸ். எஸ். தென்னரசு கலந்துகொண்டனர்

10—5—57 மாலை 6-30 மணியளவில் சென்னை-மயிலை அப்துல் மஜீத் படிப்பகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் மயிலை-பாஷாத் தோட்டத்தில் (மார்க்கெட் பின்புறம்) தோழர் பி. யூ. ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் எஸ். எஸ். தென்னரசு அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கிச் சிறிதுநேரம் பேசினர்.

அடுத்து தோழர் கண்ணதாசன் அவர்கள் கழக வளர்ச்சி குறித்தும், சட்ட மன்ற நுழைவு பற்றியும், சட்ட மன்றத்தில் அண்ணா அவர்கள் கவர்னர் உரை மீது பேசிய கருத்துரையில் உள்ள நேர்மை - கண்ணியம் - ஜனநாயகப் பண்பு இவைகளைப் பற்றியும், அதற்கு நிதியமைச்சர் அளித்த பதில் பொருந்தாத் தன்மை பற்றியும், ‘தமிழ் நாடு’ என்று பெயர் வைக்காததைக் கண்டித்தும், தமிழ் நாட்டில் இந்தி நுழைவதையும், புதுக்காசு முறையில் இந்தியை நுழைப்பதையும் விரிவாக விளக்கியும் அப்போக்கைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினர்.

இறுதியாக, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், சென்ற தேர்தலில் செல்விக்குப்பத்தில் காங்கிரசுக் கட்சியாரால் கொலை செய்யப்பட்ட தோழர் அப்துல் மஜீத் அவர்களின் தியாகத்தை விளக்கியும், கழகம் இது போன்ற தியாகிகளால் வளர்ச்சியடைந்தது என்பதை மறப்பதற்கில்லை என்பதோடு. இன்று சட்ட மன்றத்திற்கு 15 உறுப்பினர்கள் சென்றதும் இவர்களைப் போன்ற தியாகிகளின் ஆற்றல் தான் காரணம் என்பதையும், சட்ட மன்றத்தில் எல்லா உறுப்பினர்களுக்கும் பேச உரிமையும் வாய்ப்பும் அளிக்கப்படுமென்பதையும் விளக்கிப் பேசினர்.

தலைவரின் முடிவுரைக்குப்பின், தோழர் காஜா மொய்தீன் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

தலைவர்களுக்கு மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன

நகரசபைத் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி

பம்பாயில் முடிவு விவரம்

பம்பாய், மே 13—

பம்பாய் நகரசபைக்கான 131 இடங்களுக்கு தேர்தல் நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சம்யுக்த மகாராஷ்டிர சமிதி 68 இடங்களைக் கைப்பற்றியுள்ளது; இதில் பி. சோ. 26; கம்யூனிஸ்டு 13; தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் 12; காங்கிரஸ் ஜன பரிஷத் 8; ஜனசங் 2; விவசாயத் தொழிலாளர் கட்சி 2; புரட்சிக் கம்யூனிஸ்டு 1; சுயேச்சை 4—என்ற அளவில் கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

காங்கிரஸ் 54 இடங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளது.

சமிதி அபேட்சகர்கள் தனி மகாராஷ்டிர மாநிலத்தின் தலைநகராக பம்பாய் அமைய வேண்டும் என்று வற்புறுத்தி தேர்தலில் போட்டியிட்டுள்ளனர். இவர்கள் மொத்தம் 30 சதவிகிதத்திற்கு அதிகமான வாக்குகள் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

காங்கிரஸ் மொத்தம் 7,60,000 வாக்குகள் மட்டுமே பெற்றிருக்கிறது.

மொத்தமுள்ள 21,22,000 வாக்காளர்களில் 44 சதவிகிதத்தினர் வாக்குப் பதிவு செய்துள்ளனர்.

குறைந்தவருமானமுள்ளவர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம்

டில்லிப் பேரரசு சென்னைக்கு வழங்கிய தொகை எவ்வளவு?

சென்னை, மே 13—

குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீடுகட்டித்தரும் திட்டம் கடந்த 1954 முதல் அமுல் செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு மாநிலங்களுக்கும் மத்திய அரசாங்கம் இதுவரையில் கடன் உதவியளித்து வந்துள்ள தொகை ரூ. 1,746 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இப்போது உருவாக்கப்பட்டுள்ள திட்டத்திற்கு மேலும் ரூ. 223·17 இலட்சம் கடன் உதவியளிக்க மத்திய அரசாங்கம் முன்வந்துள்ளது.

உத்திரப் பிரதேசத்திற்கு ரூ. 45 இலட்சம்; ஆந்திரத்திற்கு ரூ. 25 இலட்சம்; பம்பாய்க்கு ரூ. 25 இலட்சம்; மைசூருக்கு ரூ. 25 இலட்சம்; இராஜஸ்தானுக்கு ரூ. 25 இலட்சம்; மேற்கு வங்கத்திற்கு ரூ. 18·80 இலட்சம்; டில்லிக்கு 12·88 இலட்சம்; அசாமுக்கு ரூ. 10·79 இலட்சம்; பீகாருக்கு ரூ. 9 இலட்சம்; ஒரிசாவுக்கு ரூ. 8 இலட்சம்; கேரளத்திற்கு ரூ. 3·50 இலட்சம்; இமாசலப் பகுதிக்கு ரூ. 3·20 இலட்சம்; புதுவைக்கு ரூ. 2 இலட்சம்; என்ற அளவில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சென்னைக்கு ரூ. 20 இலட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு கொடிக்கால் விவசாயிகள் மாநில மாநாடு

மதுரை, மே 10—

தமிழ் நாடு கொடிக்கால் விவசாயிகள் 2-வது மாநில மாநாடு சூன் முதல் வாரத்தில் நடைபெறுமென்று தெரிகிறது. நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம், ஏ. என். சுப்பராஜ், எஸ். இராமசாமி (நாயுடு), எம். எஸ். செல்வராஜ், எம். அழகர்சாமி, எம். பி. சுப்பிரமணியம் முதலிய சட்ட மன்ற உறுப்பினர்களும், தோழியர் விசயலட்சுமி, தோழர் எம். பழனியாண்டி ஆகியோரும் மாநாட்டில் கலந்துகொள்வார்கள் என்றும் தெரியவருகிறது.

வந்தவாசி தொகுதி தேர்தல் வழக்கு மனு

30-4-57ல் வந்தவாசி தொகுதி தேர்தல் வழக்கு மனு, கழக ஆதரவு பெற்ற அபேட்சகர் எ. தர்மக்கவுண்டரால் டில்லி தேர்தல் ஆணையாளரிடம் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது.

புதிய தி. மு. கழகக் கிளைகள் திறப்பு

தேர்தலுக்குப் பின் நாடெங்கிலும் புத்துணர்ச்சி

என். வி. நடராசன் சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

துணைப் போதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் 1—5—57 முதல் 7—5—57 வரை சுற்றுப்பயணம் செய்து ஆங்காங்கு கிளைக் கழகங்களைத் துவக்கிவைத்தும், உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் கழகத் தோழர்களிடையே ஆர்வத்திற்குத் துணைசெய்தும், கழகக் கொள்கையினையும் எதிர்காலப் பணியினையும் விவரித்துப் பொதுக்கூட்டங்களில் சொற்பொழிவாற்றிய விவரமும் இங்கு தரப்படுகிறது.

ஒவ்வொரு ஊர்களிலும் கழக நிர்வாகிகள் என். வி. நடராசன் அவர்களுடன் கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

1-5-57 :

கள்ளக்குறிச்சி அடுத்த உலகுடையன்பட்டு எனும் ஊரில் மாலை 6 மணிக்குக் கிளைக் கழகத் துவக்கப் பொதுக்கூட்டமும், மே தின விழாவும் தோழர் அம்பாயிரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மு. பாண்டியன், இராமசாமி, மற்றும் பலர் பேசிய பின் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கி வைத்து அதன் குறிக்கோளையும், மே தின விழாவின் அடிப்படைக் கொள்கையையும் விவரித்துச் சொற்பொழிவாற்றினர். ஊரின் முக்கிய இடங்களில் கழகக் கொடிகளை ஏற்றிவைத்தார்.

2-5-57

சேலம் மாவட்டம் இடைப்பாடி தொகுதியைச் சார்ந்த சின்ன சீரகப்பாடி தி. மு. கழகத் துவக்க விழா காலை 9 மணிக்கு, ஊராண்மைக் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

ஊர் எல்லையிலிருந்து கழகத் தலைவர்களை ஊர்வலமாக அழைத்துவரப்பட்டது.

தோழர் ஏ. கே. கே. இராசமாணிக்கம் கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

சேலம் மாவட்ட தி. மு. கழக துணைச்செயலாளர் ப. இராமலிங்கம் கழகத்தைத் துவக்கி வைத்துப் பேசினர்.

அடுத்து, தோழர்கள் ப. கண்ணன், இரா. தாண்டவன் ஆகியோர் பேசியபின், என். வி. நடராசன் அவர்கள் சொற்பொழிவாற்றுகையில் கழகத்தை அமைப்பு முறையுடனும் கட்டுப்பாடுடனும் நடத்திவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

அன்று மாலை 5 மணிக்கு வனையச் செட்டிப்பட்டி மாரியம்மன் திடலில் தி. மு. க. கிளைத் துவக்க விழா தோழர் வி. டி. சிங்காரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ப. கண்ணன், இரா. தாண்டவன், ப. இராமலிங்கம், ஏ. கே. கே. இராசமாணிக்கம் ஆகியோர் பேசிய பின், என். வி. நடராசன் அவர்கள் தேர்தலுக்குப் பிறகு கழகத்திற்கு ஏற்பட்டுவரும் ஆதரவையும் சக்தியையும் விவரித்துப் பேசினர்.

மாலை 7 மணிக்கு காடையாம்பேட்டை தி. மு. கழகச் சார்பில் பொதுக்கூட்டம் தோழர் ஏ. கே. கே. இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. துவக்கத்தில்மற்ற தோழர்கள் பேசியபின், என். வி. நடராசன் அவர்கள், கழகம் தேர்தலில் பெற்ற வெற்றி குறித்தும் காங்கிரசு கட்சியின் ஆதிக்க நடத்தை குறித்தும் விளக்கிப் பேசினர்.

3-5-57 :

காலை 9 - மணிக்கு ஆவணிப்பேரூர் கீழ்முகம் தி. மு. கழகத் துவக்க விழா, மாரியம்மன் கோயில் திடலில், தோழர் வீ. சீரங்கன் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஆர். வி. பெருமாள் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். தோழர் வரதராசன் கழகத்தைத் துவக்கிவைத்தார்.

பின்னர், சேலம் மாவட்ட தி. மு. கழகப் பொருளாளர் பி. எம். குப்புசாமி, துணைச்செயலாளர் இராமலிங்கம், இரா. தாண்டவன், ஏ. கே. இராசமாணிக்கம், பண்டரிநாதன் ஆகியோர் பேசினர்.

இறுதியாக என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கி, தாய்மார்கள் உள்ளிட்ட அனைவரும் கொள்கைக்கு மேலும் ஆதரவு தரவேண்டுமென்றும் சொற்பொழிவாற்றினர். செயலாளர் பெரியண்ணன் நன்றிகூற விழா இனிது முடிவுற்றது.

துவக்கத்தில், என். வி. நடராசன் கழக அலுவலகத்தைத் திறந்துவைத்தார்.

மாலை 4 மணிக்கு, குள்ளம்பட்டி அடுத்த சித்தூர் தி. மு.

(4-ம் பக்கம் பார்க்க)

விவசாயிகளுக்கு புதிய உதவி

சென்னை, மே 13—

பயிர்களைப் பாழ்படுத்தும் பூச்சிகளைத் தடுப்பதற்குக் கையால் இயக்கப்படும் இயந்திரங்கள் மூலம் மருந்து தூவும் கருவியை வாங்க விரும்பும் விவசாயிகளுக்குப் பாதி விலையில் இயந்திரங்களை விநியோகம் செய்ய அரசாங்கம் முன்வந்துள்ளது.

ரூ. 4,09,650 செலவிட்டு இயந்திரங்களை வாங்க சென்னை அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

மலைத்தோட்ட விவசாய வருமான வரி விதிப்பு

சில தகவல்கள்

சென்னை, மே 13—

சென்னை மலைத் தோட்ட விவசாய வருமான வரிச் சட்டத்தின் கீழ் தேயிலை, காப்பி, இரப்பர், ஏலக்காய், சின்கோனு ஆகியவற்றுக்கு வரி விதிக்கப்படுகிறது.

1955 - 56ல் விதிக்கப்பட்ட வரித் தொகை ரூ. 1,49,62,216; அதில் ரூ. 1,42,89,321 மட்டுமே வசூலாகியுள்ளதாம்.

இந்த ஆண்டு வரி விதிப்புத் தொகை குறையலாமென்று அஞ்சப்படுகிறது. தேயிலையின் விலை குறைந்துள்ளதே இதற்குக் காரணமாம்.

‘மருத்துவ கல்லூரியை தொழிற்சாலையாக்காதீர்’

டாக்டர்களின் ‘தரக்குறைவு’ பற்றி எச்சரிக்கை

கல்கத்தா, மே 12—

“கடந்த சில ஆண்டுகளாக மருத்துவக் கல்வி போதனு முறையின் தரம் குறைந்துவருகிறது. மாணவர்களின் தகுதிக் குறைவும், ஆசிரியர்களின் திறமைக் குறைவுமே இதற்குக் காரணம். இதை அதிகாரிகள் உணராதிருப்பது வருந்தத் தக்கது” என்று, மேற்கு வங்க மருத்துவர்கள் சங்கத்தின் 16-வது ஆண்டு விழாவில் பேசுகையில் டாக்டர் அமல்குமார் ராய் சௌத்திரி எச்சரித்துள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், மருத்துவக் கல்லூரிகளை, டாக்டர்கள் தயாரிக்கும் தொழிற்சாலையாக கருதப்படுதல் கூடாது என்றும், இதனுல் மருத்துவர்களின் தரம் குறைந்துவிடுகிறது என்றும் எச்சரித்துள்ளார்.

சித்த மருத்துவ ஆய்வுக் குழு அமைப்பு

15—4—57ல், சென்னை - திருவல்லிக்கேணியில், திரு. ஆ. கஜபதி (நாயகர்) தலைமையில் நடைபெற்ற சித்தர் கலை விழாவின் போது, சித்த மருத்துவ ஆய்வுக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இவ்வாய்வுக் குழுவில், திருவாளர்கள் டாக்டர் பி. வரதராசுலு, ஆ. கஜபதி, புருஷோத்தமம், டாக்டர் டபிள்யூ, வி. பெருமாள், ரவை. மாணிக்கம், டாக்டர் சாது தேவதாஸ், ஆ. சண்முகவேலன், மா. திருவேங்கடம், சாது. வீ. நாராயணசாமி ஆகியோர் உறுப்பினர்களாவர்.

நந்தியம்பாக்கம் ஊராட்சி மன்றத் தேர்தல்

போட்டியின்றி கழகத் தோழர் தேர்ந்தெடுக்கப்பட்டார்

செங்கற்பட்டு மாவட்டம்—நந்தியம்பாக்கம் ஊராட்சி மன்றத் தேர்தலில், பொன்னேரி வட்டம்—மேலூர் தி. மு. கழக உறுப்பினர் தோழர் அ. சித்திரைவேல் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதாக மேலூர் கிளையின் செயலாளர் அறிவிக்கிறார்.

அன்பளிப்புகள்

சென்னை-கோடம்பாக்கம் அம்பேத்கார் நினைவு மன்றத்தின் சார்பில், ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

★

திருமணங்கள்

5—5—57 காலை 9-மணிக்கு தோழர் இராமராசா—தோழியர் சந்திரா திருமணம் புதுவைப் பாரதி வீதியில் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அ. பொன்னம்பலனுர், எம். எஸ். இராமசாமி பாராட்டுரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

தஞ்சை—தத்தனூர் தோழர் பெத்தாவர்ணன்—தோழியர் காசியம்மாள் திருமணத்தின் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

★

பெயர் சூட்டல்

மதுரை மாவட்டம் பண்ணைக்காட்டில் தி. மு. கழகச் சார்பில் தோழர் ஈ.வெ.கி. சம்பத் அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் தோழர் வெங்கடாசலம் அவர்களது பெண்மகவுக்கு ‘மல்லிகா’ என தோழர் சம்பத் அவர்கள் பெயரிட்டதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தரப்பட்ட ரூ. 3 மதுரை தோழர் எஸ். முத்து அவர்கள் மூலம் வரப்பெற்றோம்.

* * *

30-4-57-ல் பொன்னேரி வட்ட மேலூர் தி. மு. கழகத் தோழர் புனிதம்-மு. குணசீலன் அவர்களின் துணைவியார் தோழியர் சேணியம்மையார் ஓர் ஆண்மகவுக்குத் தாயானர்; குழந்தைக்கு ‘உதயசூரியன்’ எனப் பெயரிடப்பட்டது; இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

திருத்தம்

சென்னை 1—5—57-ம் நாள் ‘நம் நாடு’ இதழில் வெளியான ‘சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதி’ பட்டியலில், ‘கே. எஸ். அய்யா, செயலாளர் தி. மு. கழகம், ஆக்ரா ரோடு ரூ. 50,’ என்பதை ‘தி. மு. கழகம், பம்பாய்—பாண்டுப் (கிளை) செயலாளர் கே. எஸ். அய்யா மூலம் ரூ. 50,’ என்று திருத்திக்கொள்ளவும். (ஆ-ர்.)

நெசவாளர் வாழ்வு பற்றி அண்ணா

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டாம்' என்று கூறினார்; வேண்டுமானால், நாம் கட்சிக் கருத்துக்களைப் பேசாமலிருக்கலாம். ஆனால், அரசியல் கருத்துக்களை எப்படிப் பேசாமலிருக்க முடியும்? நாம் எல்லாம் அரசியல்வாதிகள். நாமே அரசியலை வெறுத்தால், பின் உலகம் அரசியல்வாதிகளை வெறுக்கத் துவங்கிவிடுமே!

சமாளிக்க முடியுமா?

"கைத்தறி நிற்க வேண்டும்— நிலைக்க வேண்டும் என்று விரும்பினால், போட்டியை எப்படிச் சமாளிக்கப்போகிறீர்கள் என்பது தெரியவேண்டும்.

"கைத்தறி வேண்டாம் என்றால், அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான வர்களுக்கு எப்படி வேலை தேடித் தரப்போகிறீர்கள்?

தொழில் சகாப்தம் உருவாகிவிட்டதா?

"அப்படி, பல இலட்சக்கணக்கானவர்களுக்குக்கூட அல்ல — ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலைதரக்கூடிய தொழில் சகாப்தம் இந்த நாட்டில் உருவாகிவிட்டதா, என்றால், இல்லையே!

"டிராம்வே கம்பெனியோ, அல்லது வேறொரு ஆலையோ நகரில் மூடப்பட்டுவிட்டால், அதனால் வேலை இழக்கிறவர்களுக்கு வேறு வேலைதேடித் தரக்கூடிய தொழில் சகாப்தம் எங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது? அவர்களுக்கு —சில ஆயிரம் பேர்களுக்கு வேலை தேடித்தரவே நமக்கு வக்கு இல்லை—வகை இல்லை; வாய் மட்டும் நீளமாயிருந்து என்ன பயன்?

"கைத்தறி வேண்டாம் என்றால், பல இலட்சம் நெசவாளர்களுக்கு எப்படி நாம் வேலை தேடித் தரமுடியும்?

ஏங்கிக்கிடக்கிறோம்!

"கைத்தறியாளர் நிலை, இன்று ஓரளவுக்கு முன்னேறியிருக்கிறது. இதற்கு சர்க்கார்தான் காரணம் என்று தலைவர் கூறினார். அதற்கு எங்களைப் போன்றவர்களும்—ஒரு அளவு தைக் கட்சியினராகிய நாங்களும் கொஞ்சம் காரணமாயிருந்திருக்கிறோம். 'இதனை தலைவர் போன்றவர்கள் எடுத்துரைக்க மாட்டார்களா? நம்மைப்பற்றி இரண்டொரு வார்த்தை கூற மாட்டார்களா?'—என்று நாங்கள் ஏங்கிக்கிடக்கிறோம். அந்த அரசியல் பெருந்தன்மை, தலைவர் போன்றவர்களிடம் இருந்திருந்தால் நாங்கள் மகிழ்ந்திருப்போம். நாங்கள் சிறு கட்சியினர்; இந்தச் சிறு கட்சியின் நடவடிக்கைகள் ஒருவேளை பெரிய கட்சியைச் சார்ந்துள்ள தலைவர் அவர்களுக்குத் தெரியாமலிருந்திருக்கலாம்.

கூட்டுத் தாக்குதல்!

"நெசவாளருக்கு இன்று மூன்றுவகையான கஷ்டங்கள் இருக்கின்றன என்று கூறினேன். "நூல் கிடைப்பதில்லை; நூல் கிடைத்தாலும் வேலைக்குத் தகுந்த கூலி கிடைப்பதில்லை; கூலி கிடைத்தாலும் செய்த துணிக்கு மார்க்கெட் கிடைப்பதில்லை! இந்த மூன்று கஷ்டங்களும் நெசவாளர்களை, மாறி மாறி சில நேரங்களிலும், கூட்டாகச் சில நேரங்களிலும் தாக்குகின்றன. இந்தக் கஷ்டங்களிலிருந்து நெசவாளருக்கு நிரந்தரமான பாதுகாப்பு வேண்டாமா?

அமைச்சர்களே இப்படி இருந்தால்!

"ஒருமுறை நெசவாளர்கள் 80-ம் நெம்பர் நூல் கிடைக்க

தி. மு. க. எம். பி.-க்கள் முகவரி

நமது கழக பாராளுமன்ற உறுப்பினர்களின் டெல்லி முகவரி கீழே தரப்படுகிறது :—

ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
140, கான்ஸ்டிடியூஷன் ஹவுஸ்
(Constitution House)
புதுடில்லி

*

இரா. தர்மலிங்கம் எம்.பி.
116—சி, நார்த் அவின்யூ
(North Avenue)
புதுடில்லி

வில்லை என்றபோது ஒரு அமைச்சர், '40-ம் நெம்பர் நூலுடன் 40-ம் நெம்பர் நூலைச் சேர்த்தால் 80-ம் நெம்பர் நூல் கிடைக்காதா?' என்று கேட்டதாக ஒரு நெசவாளி என்னிடம் கூறினார்; அமைச்சர்கள் இப்படி இருந்தால் என்ன செய்வது?

பாதுகாப்பு இருக்கிறதா?

"சில வேளைகளில் நூல் கிடைத்து, வேலைசெய்தால் கூலி கிடைப்பதில்லை. நெசவாளருக்கு நியாயமான கூலி கிடைக்க சர்க்காரின் பாதுகாப்பு இருக்கிறதா, என்றால், இல்லை!

அவசியமாயிற்றே!

"ஆலை நெசவாளிக்குக் கூலி நிர்ணயிக்கப்படுகிறது; வேலை நேரம் நிர்ணயிக்கப்படுகிறது; சங்கம் அமைத்துக்கொள்ள உரிமையும் தரப்பட்டு, இவற்றிற்காகப் போராடவும் முடிகிறது. ஆனால், கைத்தறி நெசவாளருக்குக் கூலி, வேலைநேரம் முதலியன நிர்ணயிக்கப்படவில்லை; அதற்கான பாதுகாப்பு இல்லை. ஆலைத் தொழிலாளர்கள் ஓரிடத்தில் ஒன்று சேர்வதால் அவர்கள் சங்கம் வைத்துக்கொள்ளமுடிகிறது. ஆனால், கைத்தறியாளர் அப்படி இல்லை; சிறு சிறு கிராமங்களில் எல்லாம் பரவிக் கிடக்கிறார்கள்; ஆகவே, ஒன்றுசேர்வது கடினமாயிருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்குச் சர்க்கார் பாதுகாப்புத் தேடித் தரவேண்டியது அவசியமல்லவா?

வேண்டாம், வேண்டாம்!

"நீங்கள் காஞ்சிபுரத்திற்கு வந்து மாலை 5, 6 மணிக்கு பார்ப்பீர்களானால், ஆடிசன்பேட்டை வீதியில் நெசவாளர்கள், ஐவுளிக் கடைகளின் படிகளில் ஏறி இறங்கும் காட்சி மெத்தப் பரிதாபமாயிருக்கும்.

"மனைவி பெற்ற சகுந்தலையை 'வேண்டாம், வேண்டாம்' என்று தள்ளும் விசுவாமித்திரர்போல, ஜவுளிக்கடை முதலாளி, கைத்தறியாளர் செய்து கொண்டு வரும் துணிகளை 'வேண்டாம்—வேண்டாம்' என்று சொல்லிக் கொண்டிருப்பார். செய்த துணிகளுக்கு மார்க்கெட் தேடுவது, அத்தனை கஷ்டமாயிருக்கிறது.

"இந்த மூன்றுவகையான கஷ்டங்களிலிருந்து கைத்தறிக்குப் பாதுகாப்பு எங்கே?

கஷ்டமான தொழில்

"மேலும், இந்தக் கைத்தறியாளர் மட்டுந்தான் தங்கள் பிள்ளைகளை அந்தத் தொழிலில் ஈடுபடுத்த விரும்பாதவர்களாயிருக்கின்றனர்! இன்று அத்தனை கஷ்டமான தொழில்.

"இந்த நாட்டில் இரண்டே இரண்டு தொழில் செய்பவர்கள் தான் பணம் சம்பாதிக்கமுடியாதவர்கள்.

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்.]

கழகக் கூட்டங்கள்

உட்கோட்டை :

★

இடம்பூர் பாடசாலை விளையாட்டு மைதானத்தில்
16—5—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : ந. சந்திரகாசன்
பேசுவோர் :
க. அன்பழகன்
அறிவுடைநம்பி
இரத்தின—பாலகுருசாமி

★

நீர்ச்சாவடி :

(சிதம்பரம் வட்டம்)
15—5—57 மாலை 5-மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர் : பட்டாபிராமன்
பேசுவோர் :
இரா. சக்கரவர்த்தி
தில்லை—வில்லாளன்
புலவர் கூ. ஆறுமுகம்
இரத்தின-பாலகுருசாமி
பாலகிருட்டிணன்
சிறுமி இளங்கோ

★

இராயநல்லூர் :

(சிதம்பரம் வட்டம்)
16—5—57 அன்று
தி. மு. கழக 3-வது ஆண்டு விழா
தலைவர் :
இரா. க. சீனுவாசன்
பேசுவோர் :
அலமேலு-அப்பாதுரையார்
ஏ. கோவிந்தசாமி
இரத்தின-பாலகுருசாமி
பொன்-சொக்கலிங்கம்

தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களுக்கு ஊராட்சிமன்ற வரவேற்பு

16—5—57 மாலை 4-மணிக்கு தஞ்சை மாவட்ட—பெருஞ்சேரி ஊராட்சி மன்ற சார்பில் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களுக்கு வரவேற்பளிக்கப்படும்.

மகாபோதி சங்கம்

15—5—57 மாலை 6-மணிக்கு சென்னை மகாபோதி சங்கத்தவரால், புத்தபெருமானின் 2501-வது 'பரிநிர்வாண' விழா, சென்னை—எழும்பூர், கென்னட் சந்து—எண் 10 இல்லத்தில் நடைபெறும்; அதுபோது திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமை பெருரையாற்றுவார்கள்.

மோட்டார் ஓட்டும் பந்தயம்

விளைவித்த விபரீதம்

14 பேர் மரணம்

மாண்ட்வா, மே 12— 1,000 மைல் கார் ஓட்டும் பந்தயம் இங்கு நடைபெற்றிருக்கிறது; இதில் இத்தாலிய வீரர் பியரோ டரூபி என்பவர் வெற்றி பெற்றுள்ளார். இவர் மணிக்கு 94 மைல் வேகத்தில் காரை ஓட்டியுள்ளார்.

1955-ல் நடைபெற்ற இது போன்றதோர் போட்டியில் மொத்தம் 82 பேர் மரணமடைந்துள்ளனர்.

இந்த ஆண்டில் நடைபெற்ற இப்பந்தயத்தில், போட்டியில் கலந்துகொண்ட ஒரு காரின் டயர் வெடித்து, தந்திக் கம்பத்தில் கார் மோதி, 15 அடி உயரத் திற்குத் தூக்கி எறியப்பட்டு, சாலை ஓரத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்கள்மீது விழுந்ததால் 10 பேர் மாண்டனர்.

அதை ஓட்டிவந்த அல்பான்சா, உதவி டிரைவர் எட்டி நெல்சன் என்னும் அமெரிக்க நாட்டவர் மரணமடைந்தனராம்.

மற்றொரு விபத்தில் டச்சு நாட்டு டிரைவர் ஓட்டிவந்த கார் மரத்தில் மோதி படுகாயமடைந்து இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

பந்தயம் நடைபெறும் பாதையைப் பாதுகாத்துவந்த மோட்டார் சைக்கிள் போலீசாரும் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

புதிய தி. மு. க. கிளைகள் திறப்பு

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கழகக் கிளைத் துவக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எ. கே. கே. இராசமாணிக்கம், ப. இராமலிங்கம், சுடர் ஒளி ஆகியோர் பேசினர்.

இறுதியாக என். வி. நடராசன் அவர்கள் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் நேர்மையுடன் நடந்திருக்கிறதென்றும், ஆனால் முற்போக்கு கொள்கையற்ற கட்சிகள் அந்த நேர்மையை உணராமல், கழகத்தையே ஒழித்துக்கட்ட எண்ணம் கொண்டு தவறான வழியில் சென்றதால் அக்கட்சிகள் பெரும் நட்டத்திற்கும், நாட்டு மக்களின் கண்டனத்திற்கும் ஆளாயின என்பதை விளக்கிச் சொற்பொழிவாற்றினார்.

இரவு 7 மணிக்கு, இடைப்பாடி தி. மு. கழகச் சார்பில் பொதுக் கூட்டம் ஆரம்பப் பாடசாலைத் திடலில் தோழர் ந.கொ. அருணகிரி தலைமையில் நடைபெற்றது. ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர். துவக்கத்தில் தோழர்கள் சுடர்ஒளி, இராசமாணிக்கம், ப. இராமலிங்கம் ஆகியோர் பேசினர்.

இறுதியாக என். வி. நடராசன் அவர்கள் நீண்டதோர் சொற்பொழிவாற்றுகையில் திராவிட முன்னேற்றக் கழகம் சட்ட மன்றத்திலும், மக்கள் மன்றத்திலும் பணியாற்றி, விரைவில் நம் நாடு தனி உரிமை பெறும் கொள்கையிலும் வெற்றியுறுவோம் என்றும், அத்தகு பணிக்கு பொதுமக்கள் மேலும் பேராதரவு தரவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். தோழர் இரா. தாண்டவன் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

4-5-57 :

சோழவந்தான் அடுத்த காடுபட்டியில் மாலை 7 மணிக்கு, கழகத் துவக்க விழா சிறப்புற நடந்தேறியது. மாலை 5 மணிக்கு ஊர்வலமும் நடைபெற்றது. சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து ஏராளமான பொதுமக்கள் வந்திருந்தனர். இக்கூட்டத்தில் மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து, திண்டுக்கல் சமதர்மம் மற்றும் பல தோழர்கள் பேசினர்.

இறுதியாக என். வி. நடராசன் அவர்கள், கடந்த ஒன்பது ஆண்டுகளாக கழகம் ஆற்றிவரும் பணியினையும் எதிர்காலத்தில் ஆற்றயிருக்கும் ஆக்கவேலைகளையும் பொதுத் தேர்தலில் கழகம் அடைந்துள்ள வெற்றியினையும் விவரித்துப் பேசினர்.

5-5-57 :

மாலை 5 மணிக்கு கரூர்—பசுபதிபாளையம் வார்டு கிளைக் கழக அலுவலகத்தை என். வி. நடராசன் அவர்கள் துவக்கிவைத்து, கழகக் கொடியையும் ஏற்றிவைத்தார். துவக்கத்தில் தோழர்கள் என். வி. என்., டி. கே. சீனிவாசன், குழந்தைவேலு, கே. எஸ். பெரியார், கரூர் ரத்தினம் ஆகியோர்கள் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டனர்.

மாலை 7 மணிக்கு கரூர் தியாகராயர் திடலில் தி. மு. கழகச் சார்பில் மே தின விழா நடைபெற்றது. ஏராளமான தொழிலாளர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

தோழர்கள் என். இரத்தினம், என். குழந்தைவேல், கரிகாலன் ஆகியோர் பேசியபின், தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள் மே தின விழாவின் மாண்பை எடுத்துக் கூறினர்.

இறுதியாகத் தோழர் என். வி. நடராசன் அவர்கள் மே தின விழாவின் அடிப்படைக் கொள்கையை வெற்றியுறச் செய்யும் வகையில் திராவிடத்தில் பணியாற்றிவருவது தி. மு. கழகமேயென்றும், பஸ் போக்குவரத்து போன்ற முக்கிய தொழில்களை — கோடிக்கணக்கான ரூபாய் வருமானம் வரக்கூடிய தொழில்களைத் தேசியமயமாக்குதல் வேண்டுமென்றும், பொதுத் தேர்தலிலும் அதைத் தொடர்ந்தும் கழகம் அடைந்து வரும் மகத்தான சக்தியையும் விளக்கி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். கூட்டம் இரவு 10-30 மணிக்கு முடிவுற்றது.

6-5-57 :

கரூர் வட்டம் கூடலூர் தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா மாலை 7 மணிக்கு, சந்தைத் திடலில் கன்னிவாடி கே. எஸ். எஸ். பெரியார் தலைமையில் நடைபெற்றது. துவக்கத்தில் என். வி. நடராசன் அவர்கள், கழக அலுவலகத்தில் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். தோழர்கள் கே. சின்னசாமி, பி. சி. கந்தசாமி, எம். பி. சண்முகம், என். ஆர். இராமசாமி, என். இரத்தினம், எம். குழந்தைவேலு, எம். கே. கரிகாலன் ஆகியோர் பேசினர்.

இறுதியாக, என். வி. நடராசன் அவர்கள் கடந்த பத்து ஆண்டுகால காங்கிரஸ் ஆட்சியின் அலங்கோலம் குறித்து விளக்கிப் பேசினர்.

7-5-57 :

திண்டுக்கல் அடுத்த கல்வார்பட்டி தி. மு. கழகச் சார்பில் மாலை 7 மணிக்கு, அர்ச்சுனன் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் முத்துசாமி தலைமை வகித்தார். துவக்கத்தில் தோழர்கள் இரா. இராமலிங்கம், எம். காதர்சா, சின்னச்சாமி, பி. சமதர்மம், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, குட்டப்பாளையம் பழனிச்சாமி ஆகியோர் பேசினர்.

இறுதியில், தோழர் என். வி. நடராசன் அவர்கள், கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

மாலை 5 மணிக்கு, டபிள்யூ. பி. ஏ. எஸ். படிப்பகத்திலிருந்து அனைவரையும், மேள வாத்தியங்களுடன் வரவேற்று ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். ஏராளமான கிராம மக்கள் கூடியிருந்து சிறப்பித்தனர்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

மே
14 : மாலை—நேரூர் நூர்
15 : மாலை—சிற்றிடையாநல்லூர் (ஆடுதுறை)
16 : மாலை—உட்கோட்டை (கங்கைகொண்டசோழபுரம்)

தில்லை-வில்லாளன்

சுற்றுப்பயணம்

மே 15 : கீழ்சாவடி
24 : கீழசிறப்பாளையம்
30 : கன்னங்குடி
ஜுன் 2 : செயங்கொண்டம்

விவசாயத் தொழிலாளர் முன்னேற்றக் கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டம்

16—5—57 மாலை 6-மணிக்கு, தஞ்சை மாவட்டம் — மங்கலநல்லூர், பெருஞ்சேரியில் தோழியர் கழகத் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் தோழர் ரி. வெங்கிட கிருஷ்ணன் தலைமையில் நடைபெறும்; தோழியர் சத்தியவாணி முத்து, தோழர் என். கிட்டப்பா மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.